டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
காலைமணி.காம்
29.6.2023 வியாழக்கிழமை • மதுரை • பக்கங்கள் 24 • Online Edition • www.kaalaimani.com

### 2022-23-ஆம் நிதியாண்டில்

# பிஎல்ஐ திட்டத்திற்கு ரூ.2,900 கோடி ஊக்கத்தொகையாக விடுவிப்பு

## வர்த்தகம், தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல்

புது தில்லி, ஜூன் 28

2022-23-ஆம் நிதியாண்டில் பிஎல்ஐ திட்டத்திற்கு ரூ.2,900 கோடி ஊக்கத்தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பாவது:

ஊக்கத்தொகையுடன் கூடிய உற்பத்தித் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் வளர்ச்சியை மேம்படுத்தி, சாதகமான வணிகச் சூழலை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய வர்த்தகம், தொழில், நுகர்வோர் நலன், உணவு பொதுவிநியோகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழில் மற்றும் உள்நாட்டு வணிக மேம்பாட்டுத்துறை சார்பில் ஊக்கத்தொகையுடன் கூடிய உற்பத்தித் திட்டங்கள் (பிஎல்ஐ) குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அமைச்சர் பியூஷ் கோயல், ஊக்கத் தொகை யுடன் கூடிய உற்பத்தித் திட்டங்களின் பயன்கள், அரசு கொள்கை யின் சாராம்சம், அமல்படுத்தும் நடைமுறைகள் ஆகியவற்றை முன்னிறுத்தியதுடன் தொழில்துறையினர் அளிக்கும் ஆதரவையும் பாராட்டினார்.

தொழிற்துறையினரின் தேவையையும், நுகர்வோரின் தேவையையும் கருத்தில் கொண்டு தரம் உயர்ந்த பொருட்களை

உற்பத்தி செய்வதில், தொழிற்துறையினர் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்திய அவர், பிஎல்ஐ திட்டங்களை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் சீர்திருத்த நடவடிக்கைகளை சவாலாகக் கருதி பயனாளிகள் தங்களின் பங்களிப்பைச் செலுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதிகாரிகள் சீர்திருத்தங்களை அமல்படுத்துவதற்கு முன்பு பயனாளிகளுடன் தொடர் ஆலோசனை நடத்தினால் பிரச்னைகளுக்கு எளிதில் தீர்வு காணமுடியும் என்றும் குறிப்பிட்டார். இந்தியாவை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்றவேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் பார்வைக்கிணங்க இந்தக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார். இந்தக் கருத்தரங்கில் பிஎல்ஐ திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகள், தகுதிக்கான வரம்புகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படுவதாக தெரிவித்தார்.

2023-ஆம் ஆண்டு மார்ச் வரையிலான காலகட்டத்தில், இந்தத் திட்டத்திற்கு ரூ.62,500 கோடி முதலீடு செய்யப்பட்டதன் மூலம், ரூ.6.75 லட்சம் கோடி அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டிருப்ப தாகவும், 3,25,000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டி ருப்பதாகவும் கூறினார். 2022-23-ஆம் நிதியாண்டில் ரூ.2.56 லட்சம் கோடி அளவிற்கு ஏற்றுமதி நடைபெற்றிருப்பதாகவும், 2022-23-ஆம் நிதியாண்டில் பிஎல்ஐ திட்டத்திற்கு ரூ.2,900 கோடி ஊக்கத்தொகையாக விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.




சென்னை தலைமைச் செயலகத்தில் ரமேஷ் வங்கிபுரம் எழுதிய வார்பத்-வாக்கிங் தி பேட்டில்ஃபீல்ட்ஸ் ஆப் சோழாஸ் என்ற புத்தகத்தை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

# மின்சாரத் துறையில் சீர்திருத்தங்களை தீவிரப்படுத்தும் மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி ஊக்குவிப்பு

புது தில்லி, ஜூன் 28

மின்சாரத் துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் மாநிலங்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், கூடுதல் கடன்களைப் பெறுவதற்கு அனுமதியளிப்பது போன்ற நிதி ஊக்குவிப்பை மத்திய நிதி அமைச்சகத்தின் செலவுத்துறை வழங்கி வருகிறது. மின்சாரத் துறையில் செயல்திறன் மற்றும் திறனை அதிகரிக்க சீர்திருத்தங்களை செயல்படுத்தி வரும் மாநிலங்களை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.



மத்திய அரசின் 2021-22 பட்ஜெட்டில் மத்திய நிதியமைச்சர் இந்த முன் முயற்சியை அறிவித்தார். இந்த முன்முயற்சியின் கீழ், கூடுதல் கடன் பெறும் வசதி, மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற் பத்தியில் 0.5 சதவீதம் அதிகரிக்கும். இது 2021-22 முதல் 2024-25 வரை நான்கு ஆண்டு காலத்துக்கு கிடைக்கும். இந்த கூடுதல் நிதி ஆதரவு, மாநிலங்கள் மின்சாரத்துறையில் மேற்கொள்ளும் சீர்திருத்த அமலாக்கங்களைப் பொறுத்து அமையும். இந்த முன் முயற்சி, மாநில அரசுகள் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற் கொள்ள உந்துதலாக இருக்கிறது. பல்வேறு மாநிலங்கள் மேற் கொண்ட சீர்திருத்தங்கள், புரிந்த சாதனைகள் குறித்த விவரங்களை மத்திய மின்துறை அமைச்சகத்திடம் சமர்ப்பிக்க முன்வந்துள்ளன.

மத்திய மின்துறை அமைச்சகத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2021-22, 2022-23-ல் 12 மாநில அரசுகளுக்கு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான அனுமதியை மத்திய நிதியமைச்சகம் வழங்கியுள்ளது. கடந்த இரண்டு நிதியாண்டுகளில், கூடுதல் கடன் அனுமதியின் மூலம் ரூ. 66,413 கோடி நிதி ஆதாரத்தைப் பெருக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் தமிழ்நாட்டுக்கு ரூ.7,054 கோடி கூடுதல் கடன் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்துக்கு அதிகபட்சமாக ரூ. 15,263 கோடியும், ராஜஸ்தானுக்கு ரூ. 11,308 கோடியும், ஆந்திராவுக்கு ரூ.9,574 கோடியும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# நாட்டின் தேசிய நெடுஞ்சாலைகளின் தூரம் 59 சதவீதம் அதிகரித்துள்ளது: நிதின் கட்கரி




புது தில்லி, ஜூன் 28

கடந்த 9 ஆண்டுகளில் நாட்டின் தேசிய நெடுஞ்சாலைகளின் ஒட்டுமொத்த தூரம் 59 சதவீதம் அதிகரித்திருப்பதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். இதன் மூலம் இந்தியா தற்போது, அமெரிக்காவிற்கு அடுத்தப்படியாக இரண்டாவது மிகப்பெரிய சாலை நெட்வொர்க்-ஐ கொண்ட நாடாகத் திகழ்கிறது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, கடந்த 2013-14-ம் ஆண்டில் 91 ஆயிரத்து 287 கிலோ மீட்டராக இருந்த தேசிய நெடுஞ்சாலையின் ஒட்டுமொத்த தூரம், 2022-23-ம் ஆண்டில் 1 லட்சத்து 45 ஆயிரத்து 240 கிலோ மீட்டராக அதிகரித்து இருக்கிறது என்றார்.

சுங்கவரி வசூலுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஃபாஸ்-டேக் மூலம் சுங்கவரி வசூல் கணிசமாக அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டார். 2013-14-ம் ஆண்டில் 4 ஆயிரத்து 770 கோடி ரூபாயாக இருந்த சுங்கவரி வருவாய், 2022-23-ம் ஆண்டில் 41 ஆயிரத்து 342 கோடி ரூபாயாக உயர்ந்திருப்பதாகவும் நிதின் கட்கரி கூறினார். அதே நேரத்தில் வரும் 2030-ம் ஆண்டுக்குள் சுங்கவரி வருவாயை 1 லட்சத்து 30 ஆயிரம் கோடியாக அதிகரிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஃபாஸ்-டேக் மூலம் சுங்கச்சாவடிகளில் வாகன ஓட்டிகளின் காத்திருப்பு நேரம் கடந்த 2014-ம் ஆண்டு 734 விநாடிகளாக இருந்ததாகவும், அந்தக் காத்திருப்பு நேரம் தற்போது, 47 விநாடிகளாக குறைந்திருப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், இதனை 30 விநாடிகளாக விரைவில் குறைப்போம் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். இவ்வாறு சுங்கச் சாவடிகளில் வாகன ஓட்டிகளின் காத்திருப்பு நேரம் குறைக்கப்பட்டு இருப்பதன் மூலம், எரிபொருளுக்கு செலவிடப்பட்ட 70 ஆயிரம் கோடி ரூபாய் தற்போது சேமிப்பாக மாறியிருப்பதாகவும் ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டு இருப்பதையும் சுட்டிக்காட்டினார். மத்திய அரசின் உள்கட்டமைப்புக்கான முதலீடு அறக்கட்டளை மாதிரிக்கு அமோக வரவேற்பு கிடைத்திருப்பதாக தெரிவித்த நிதின் கட்கரி, இந்தத் திட்டத்தில் முதலீடு செய்ய முன்வருமாறும் அழைப்பு விடுத்தார்.

# உக்ரைனுக்கு மேலும் 4 ஆயிரம் கோடி அளவில் ஆயுதம் உதவி: அமெரிக்கா வழங்குகிறது

நியூயார்க், ஜூன் 28

ரஷியாவால் ஆக்கிரமிக்கப்பட்ட அதன் அண்டை நாடான உக்ரைன், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் உதவியோடு ரஷியாவை எதிர்த்து தொடர்ந்து ஓராண்டிற்கும் மேலாக போராடி வருகிறது. இந் நிலையில், உக்ரைனுக்கு, 50க்கும் மேற்பட்ட கவச வாகனங்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளுக்கான ஏவுகணைகள் உட்பட 500 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிற்கு ராணுவ உதவியை அமெரிக்கா வழங்கும் என பென்டகன் அறிவிக்கவிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

மெதுவாக நகர்ந்து செல்லும் உக்ரைனின் எதிர் தாக்குதலை வலுப்படுத்தும் நோக்கில் இந்த உதவி அமைந்துள்ளது. இந்த உதவித்தொகை குறித்த அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிப்ரவரி 2022-ல் உக்ரைனுக்குள் ரஷிய படையெடுப்பிற்கு பிறகு, அமெரிக்க அதிபரின் சிறப்பு அதிகாரத்தின் மூலம் அமெரிக்கா, ராணுவ ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவது இது 41வது முறையாகும். அதிகாரிகளின் அறிவிப்பின் படி, உயர்-மொபிலிட்டி பீரங்கி ராக்கெட் அமைப்பு மற்றும் பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகளுக்கான ஏவுகணைகளுடன், 30 பிராட்லி சண்டை வாகனங்கள் மற்றும் 25 கவச ஸ்ட்ரைக்கர் வாகனங்கள் உக்ரைனுக்கு அனுப்பப்படும் ஆயுத தொகுப்பில் அடங்கும். இந்த தொகுப்பில் ஈட்டி மற்றும் அதிவேக கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணைகள், தடை-நீக்கும் உபகரணங்கள், தகர்த்தல் தளவாடங்கள் ஆகியவையும் அடங்கும்.




# எச்ஏஎல் நிறுவனத்தின் பங்கு பிரிப்புக்கு நிர்வாக குழு ஒப்புதல் வழங்கியது

புது தில்லி, ஜுன் 28

எச்ஏஎல் எனும் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட், 1:2 என்ற விகிதத்தில் பங்குப் பிரிப்பை மேற்கொள்ள இருப்பதாகவும்; கடந்த 2022-23 நிதியாண்டிற்கான இறுதி ஈவுத்தொகையாக 15 ரூபாயை வழங்க இருப்பதாகவும் அறிவித்திருப்பதாக செய்திள் வெளியாகியுள்ளது. இதற்கு இந்நிறுவனத்தின் நிர்வாக குழு அனுமதி வழங்கி உள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: பெங்களூரை தலைமையிடமாக கொண்ட இந்நிறுவனம், பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.

தற்போது, 10 ரூபாய் முக மதிப்பில் உள்ள ஒரு பங்கானது, இரண்டு பங்குகளாக பிரிக்கப்படும். மேலும், நிறுவனம் வரும் செப்டம்பர் 29ம் தேதியை, பதிவு தேதியாக நிர்ணயித்துள்ளது. பதிவு தேதி வரை, பங்குகளை வைத்திருக்கும் முதலீட்டாளர்கள், டிமேட் கணக்குகளில் புதிய பங்குகளை பெறுவர். பங்குகளின் விலை, பிரிப்பு விகிதத்திற்கு ஏற்ப சரிசெய்யப்படும். சந்தையில் பங்குகளின் பணப்புழக்கத்தை அதிகரிக்கவே, பங்கு பிரிப்பு வழக்கமாக செய்யப்படுகிறது.



# அதிக ஓய்வூதியம் பெறுவதற்கான காலக்கெடு ஜூலை 11 வரை நீட்டிப்பு: இபிஎஃப்ஓ தகவல்

மும்பை, ஜூன் 28

பணியாளர் ஓய்வூதிய திட்டத்தின் (இபிஎஸ்) கீழ் அதிக பென்சன் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கால அவகாசம் ஜூலை 11 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதன்மூலம் ஊழியர்களும், ஓய்வூதியதாரர்களும் மேலும் 15 நாட்கள் அவகாசம் பெறுகின்றனர். இந்தக் காலக் கடத்தைப் பயன்படுத்தி, பணியாளர்கள் தங்கள் முதலாளிகளுடன் தொடர்புடைய பிராந்திய அலுவலகத்தில் பத்தி 11(3) மற்றும் 11(4) ஆகியவற்றின் கீழ் கூட்டு விருப்பத்தினை சமர்ப்பிக்கலாம். அதே போல் நிறுவனங்கள் செப்டம்பர் 30ம் தேதிக்குள் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை சரிபார்த்து ஒப்புதல் வழங்க வேண்டும்.

ஏற்கெனவே மே 3ம் தேதியுடன் அதிக ஓய்வூதியம் பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் அது ஜூன் 26 ஆக நீட்டிக்கப்பட்டது. தற்போது 2வது முறையாக நீட்டிக்கப்பட்டு ஜூலை 11 வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள் மற்றும் ஊழியர்கள் பிரதிநிதிகள் மத்திய அரசிடம் கால அவகாசத்தை நீட்டிக்கக் கோரியதன் அடிப்படையில் இந்தச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இதுவே கடைசி வாய்ப்பாக இருக்கும் என்று இபிஎஃப்ஓ அமைப்பு தெரிவித்துள்ளது. நேற்று (ஜூன் 26, 2023) வரை நாடு முழுவதுமிருந்து அதிக ஓய்வூதியம் கோரி 16 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக அது தெரிவித்துள்ளது. அதேபோல், ஓய்வூதியதாரர்கள், ஊழியர்கள் என சுமார் 1000 பேருக்கு இபிஎஃப்ஓ சார்பில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியுடைய பென்சன்தாரர்கள் அல்லது ஊழியர்கள் கேஒய்சி தகவல்களை சேர்ப்பதில் சிரமங்களை சந்தித்தால் அவர்கள் EPFiGMS மூலம் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், தொழில் நிறுவனங்கள் தங்களின் ஊழியர்களுக்கான ஊதிய விவரங்களை தெரிவிக்க 3 மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. இபிஎஃப்ஓ-வின் தொழில்நிறுவனங்கள் தரப்பு பிரதிநிதி கே.இ.ரகுநாதன் தெரிவித்துள்ளதாவது: தொழில் நிறுவனங்களுக்கு 3 மாத கால அவகாசமும், தொழிலாளர்களுக்கு 15 நாள் அவகாசமும் வழங்கி இபிஎஃப்ஓ தனது நேயத்தை நிரூபித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# கடந்த 3ஆண்டுகளில் ஜெம் மூலம் கொள்முதல் வளர்ச்சி 10 மடங்கு அதிகரித்துள்ளது: அமைச்சர் பியூஷ் கோயல்

புது தில்லி, ஜூன் 28

ஜெம் எனப்படும் அரசின் இ-சந்தை மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் கொள்முதல் வளர்ச்சி 10 மடங்கு அதிகரித்திருப்பதாக மத்திய வர்த்தகம், தொழில், உணவு, பொது விநியோகம் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஜெம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த க்ரேடா-விக்ரேடா கௌரவ் சம்மான் சமரோவா 2023 விழாவில் உரையாற்றிய அவர், இ-சந்தையில் அனைத்து பங்குதாரர் களுக்கும் பாராட்டுத் தெரிவித்தார். நாடு முழுவதும் பொது கொள்முதலில் வெளிப்படையான மாற்றத்தை உருவாக்கியிருப்பதாகக் கூறிய அவர், புதிய தொழில்நுட்பங்கள் மூலம் கொள்முதல் நடைமுறையின் தனித்துவம் வாய்ந்த வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவர வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கனவை ஜெம் நனவாக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார். கடந்த 7 ஆண்டுகளில் அரசு இ-சந்தையின் பலன்கள் மற்றும் அதன் பன்முகத்தன்மையிலான வளர்ச்சிக் குறித்தும் விளக்கினார்.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் துறைகள், மக்கள் நலன் திட்டங்களுக்கான சரக்கு கொள்முதலுக்கு ஜெம்-மை அதிகளவில் பயன்படுத்தியதன் வாயிலாக வரி செலுத்துவோரின் பணம் சேமிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

2022-23 நிதியாண்டுக்கான ஒட்டுமொத்த சரக்கு கொள்முதல் மூன்று லட்சம் கோடி ரூபாயைத் தாண்டும் என்று நம்பிக்கைத் தெரிவித்த அமைச்சர், ஏற்கனவே, 2022-23-ம் நிதியாண்டின் இரண்டு லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியிருப்பதையும் நினைவுக் கூர்ந்தார்.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் சார்பில் அரசுஇ-சந்தைக்கான புதிய நடைமுறை உருவாக்கப்பட்டிருப்பதாகவும், இது வணிகர்களும், விற்பனையாளர்களும் கொள்முதல் சார்ந்த முடிவுகளை எடுக்க உதவிகரமாக இருப்பதாகவும் கூறினார். இந்தியாவின் மிகப்பெரிய மென்பொருள் ஏற்றுமதி நிறுவனமான டிசிஎஸ் ஜெம் போர்டலை பராமரிக்கும் ஒப்பந்தத்தைப் பெற்றிருப்ப தாகவும் தெரிவித்தார்.

# தானியங்கி பேக்கேஜ் டிராப் வசதி தில்லி விமான நிலையத்தில் அறிமுகம்

புது தில்லி, ஜூன் 28

தில்லி விமான நிலையத்தில், பயணியரின் உடைமைகளை, தானியங்கி சோதனை இயந்திரம் வாயிலாக, சோதனை செய்யும் முறை, அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.



இது குறித்து விரிவான செய்தியாவது: தில்லி, இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின், உள்நாட்டு முனையத்தின், மூன்றாவது டெர்மினலில், எஸ்பிடி., எனப்படும், செல்ப்பேக்கேஜ்-டிராப் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, உள்நாட்டு முனையத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள, இந்த வசதி, அதிகாரிகளின் ஒப்புதல்களுக்கு பின், சர்வதேச முனையத்துக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

இது குறித்து, தில்லி சர்வதேச விமான நிலைய நிறுவன, சிஇஓ விதே குமார் தெரிவித்துள்ளதாவது: 14 எஸ்பிடி இயந்திரங்கள், விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளன. இதன் வாயிலாக, தற்போது இண்டிகோ விமான நிறுவன பயணிகளின் உடைமைகள் மட்டும் சோதனை செய்யப்பட்டு வருகின்றன ; இதனால், பயணியர் உடைமைகள் சோதனைக்காக, 15 முதல் 20 நிமிடங்கள் வரை, காத்திருப்பது தடுக்கப்பட்டுள்ளது.

இதை பின்பற்றி, ஏர்இந்தியா, விஸ்தாரா, ஏர்பிரான்ஸ், கே.எல்.எம்., ராயல் டச்சு ஏர்லைன்ஸ் மற்றும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் ஆகிய, விமான நிறுவனங்களும், இம்முறையை கொண்டு வரலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது. இம்முறையின் சோதனையில், முதலில் பயணியர் தங்களின் போர்டிங் பாஸ் மற்றும் பேக்கேஜ்களுக்கான செல்ப்செக்கின் குறிச்சொற்களை உருவாக்க வேண்டும். அடுத்த தாக, போர்டிங் பாஸை, ஸ்கேன் செய்து, தடை செய்யப்பட்ட பொருட் கள் எதுவும் இல்லை என்பதை, உறுதி செய்த பின், தங்களின் உடைமைகளை, பெல்ட்டில் ஏற்ற வேண்டும். அவை, தானாகவே வரிசைப்படுத்தப்பட்டு, விமானத்தில் ஏற்றப்படும். இதில், குறிப்பிட்ட எடைக்கு மேல் உள்ள, உடைமைகளை இயந்திரம் ஏற்காது. இவற்றில், ஏதேனும் குளறுபடிகள் ஏற்படுவதை தடுக்க, விமான நிலை ஊழியர்களும் இருப்பர். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

# வெளிநாட்டு சரக்குகள் வந்தடையும் வரை சேமிப்பில் உள்ள துவரம் பருப்பை விடுவிக்க முடிவு

புது தில்லி, ஜூன் 28

இந்திய சந்தைக்கு வெளிநாட்டு சரக்குகள் வந்தடையும் வரை தேசிய சேமிப்பில் இருந்து துவரம் பருப்பை அரசு விடுவிக்க வுள்ளது. தகுதியுடைய ஆலையாளர்களுக்கு இணையதள ஏலம் வாயிலாக துவரம் பருப்பு அளிக்கப்படவுள்ளது.



இது குறித்து மத்திய நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம், நுகர்வோர் விவகாரத்துறை ஆகியவை இணையதளம் ஏலம் வாயிலாக தகுதியுடைய ஆலையாளர்களுக்கு துவரம் பருப்பை அளிக்குமாறு தேசிய வேளாண் கூட்டுறவு சந்தை கூட்டமைப்பு, தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்புக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதன் மூலம் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் துவரம் பருப்பு கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. பதுக்கலை தடுக்கவும், நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கசெய்யும் வகையிலும் அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955-ன் படி துவரம் பருப்பு மற்றும் உளுத்தம்பருப்பு இருப்பு வைப்பதற்கான அளவை 2023, ஜூன் 2 அன்று அரசு வரையறை செய்தது. இந்த இருப்பு அளவை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 2023 அக்டோபர் 31 வரை அமல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்து மொத்த விற்பனையாளர்களும் தலா 200 மெட்ரிக்டன் அளவிற்கு அனைத்து தானியங்களையும் இருப்பு வைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. சில்லரை வியாபாரிகள் தலா 5 மெட்ரிக் டன் அளவிற்கு தானியங்களை இருப்புவைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பெரிய அளவிலான சில்லரை விற்பனையாளர்கள் 200 மெட்ரிக்டன் அளவிற்கு தானியங்களை கிடங்குகளில் இருப்புவைக்க அனுமதிக்கப் படுகிறது. இது குறித்த விவரங்களை (https://fcainfoweb.nic.in/psp) என்ற இணையதளம் மூலம் அறிந்துகொள்ளலாம்.

# மீன்நோயைக் கண்டறிவதற்கும், வகைப்படுத்துவதற்குமான புதிய செயலியை மத்திய அமைச்சர் அறிமுகம் செய்தார்

புது தில்லி, ஜூன் 28

மீன்வளர்ப்புத்துறை கடந்த சில ஆண்டுகளாக சிறப்பான வளர்ச்சியை பெற்று வருவதாகவும், 2021-22 நிதியாண்டில் ஏற்றுமதி வாயிலாக தோராயமாக 57,586 கோடியை இத்துறை ஈட்டியுள்ளது. இருப்பினும் மீன்வளர்ப்புத்துறையைப் பொறுத்த மட்டில், மீன்களைத் தாக்கும் பல்வேறு விதமான நோய்கள் இந்தத்துறையின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருக்கிறது. எனவே நோய் சார்ந்த தாக்கத்தைக் குறைத்துக்கொள்ள, நோய் தாக்குலை அடையாளம் காண்பதும், ஆரம்ப காலத்திலேயே அவற்றை குணப்படுத்துவதும் அத்தியாவசியமாகிறது.

இதனைக் கருத்தில்கொண்டு விவசாயிகள் அடிப்படையாகக் கொண்ட மீன்களுக்கான நோய் அறிக்கை அமைப்பை வலுப்படுத் துவதற்கும், நாடு முழுவதும் உள்ள கடல்வாழ் உயிரினங்களின் நோய் அறிக்கையை மேம்படுத்துவதற்காகவும் மத்திய மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, அதிநவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட மீன்நோயைக் கண்டறிவதற்கும் அவற்றை வகைப்படுத்துவதற்குமான செயலியை அறிமுகம் செய்கிறார்.

இந்த செயலி, மீன்களுக்கு ஏற்படும் நோயிலிருந்து அவற்றைப் பாதுகாப்பதற்கான அறிவியல் ஆலோசனைகளை விவசாயி களுக்கு வழங்கி உதவும். மீன்களுக்கு ஏற்படும் நோய்களை அடையாளம் காணுதல், நோய்களினால் ஏற்படும் இழப்பைக் குறைத்து வருமானத்தை அதிகரித்தல் போன்றவற்றிற்கும் இந்த செயலி பேரூதவியாக இருக்கும்.



# நடப்பு கணக்கு பற்றாக்குறை 4வது காலாண்டில் 0.20 சதமாக சரிந்தது: ஆர்பிஐ தரவுகள் தகவல்

புது தில்லி, ஜுன் 28

நாட்டின் நடப்பு கணக்கு பற்றாக்குறை, கடந்த நிதியாண்டின் நான்காவது காலாண்டில், ரூ.10,660 கோடியாக அதாவது, ஜி.டி.பி., எனும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.20 சதமாக சரிந்துள்ளதாக, ஆர்பிஐயின் தரவுகள் தெரிவிக்கின்றன. இது குறித்து விரிவான செய்தியாவது: கடந்த நிதியாண்டின் கடைசி காலாண்டான ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலத்தில், நடப்பு கணக்கு பற்றாக்குறை 10,660 கோடி ரூபாய், அதாவது, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2 சதமாக சரிந்துள்ளது. இது, இதற்கு முந்தைய மூன்றாம் காலாண்டில் 1.38 லட்சம் கோடியாகவும்; ஜிடிபியில் 2.0 சதமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

மிதமான வர்த்தக பற்றாக்குறை மற்றும் சேவைகள் துறை ஏற்றுமதியில் வலுவான அதிகரிப்பு ஆகியவையே, நான்காவது காலாண்டில், நடப்பு கணக்கு பற்றாக்குறை குறைவதற்கான முக்கிய காரணமாக இருந்ததாக, ஆர்பிஐயின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில், வர்த்தக பற்றாக்குறை ரூ.5.85 லட்சம் கோடியாக இருந்தது, 4வது காலாண்டில் ரூ.4.31 லட்சம் கோடியாக சரிவடைந்தது. சேவைகள் துறை ஏற்றுமதி, குறிப்பாக கணினி சேவையின் வாயிலாக நிகர வருமானம் அதிகரித்திருந்தது.



# கரென்ஸ் மாடலை ரிகால் செய்கிறது கியா

மும்பை, ஜுன் 28

கியா இந்தியா நிறுவனம் தனது கரென்ஸ் எம்பிவி மாடலின் 30,297 யூனிட்களை திரும்ப பெறுவதாக அறிவித்துள்ளது.

காரின் டிஜிட்டல் இன்ஸ்ட்ருமெண்ட் கிளஸ்டரில் ஏற்பட்டு இருக்கும் பிழையை சரி செய்வதற்காக இந்த ரிகால் அறிவிப்பு வெளியாகி உள்ளது. இன்ஸ்ட்ருமெண்ட் கிளஸ்டர்-ஐ திடீரென ஆஃப் ஆனதை போன்று மாற்றிவிடும் பிரச்சினை கியா கரென்ஸ் எம்பிவி மாடலில் ஏற்பட்டு இருக்கிறது. அதன்படி ரிகால் செய்யப்படும் கரென்ஸ் மாடல்களில் டிஜிட்டல் இன்ஸ்ட்ருமெண்ட் கிளஸ்டர் சரிபார்க்கப்படுகிறது.




கோளாறை சரி செய்வதற்கான மென்பொருள் அப்டேட் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இந்த பிரச்சினையில் 2022 செப்டம்பர் முதல் பிப்ரவரி 2023 வரையிலான காலக்கட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட யூனிட்கள் பாதிக்கப்பட்டு உள்ளன. பொறுப்புள்ள கார்ப்பரேட் என்ற அடிப்படையில், நிறுவனம் சார்பில் சீரான இடைவெளியில் உபகரணங்களை கியா சர்வதேச தரத்துக்கு இணையான முறையில் டெஸ்டிங் செய்து வருகிறது. ரிகால் செய்யும் வாகனங்களை ஆய்வுக்கு உட்படுத்தி, தேவைப்படும் பட்சத்தில் இலவசமாக மென்பொருள் அப்டேட் வழங்கப்படும். கியா இந்தியா தனது வாடிக்கையாளர்களுக்கு தலைசிறந்த பிரான்டு அனுபவத்தை வழங்குவதை குறிக்கோளாக வைத்து இருக்கிறது,' என்று கியா இந்தியா வெளியிட்டு இருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும், புதிய கோளாறில் பாதிக்கப்பட்ட வாகனங்களை பயன்படுத்தி வரும் வாடிக்கையாளர்களை நிறுவனம் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கும். பாதிக்கப்பட்ட யூனிட்களை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் கியா அதிகாரப்பூர்வ விற்பனையாளர்களை தொடர்பு கொண்டு, காரை சரி செய்வதற்கான முன்பதிவு செய்து கொள்ளலாம்.

பயோமாஸ் துகள்களை குறைந்தவிலையில் வாங்குவதற்கான

# உயிரி எரிபொருள்கூட்டுக் கொள்கையை மத்திய மின் அமைச்சகம் மாற்றியது




புது தில்லி, ஜூன் 28

அனல் மின் நிலையங்களில் மின்சாரம் தயாரிக்க பயன்படுத்தப்படும் பயோமாஸ் துகள்களின் விலையை நிர்ணயம் செய்ய மத்திய மின்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. உயிரி எரிபொருள் துகள்களுக்கான வளர்ந்து வரும் சந்தை நிலைமை களை கருத்தில் கொண்டு, அனல் மின் நிலை யங்கள், துகள்கள் உற்பத்தியாளர்கள், விவசாயிகள், வங்கியா ளர்கள் உள்ளிட்ட பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை களைக் கருத்தில் கொண்டும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வணிக நம்பகத்தன்மை, மின் கட்டணத்தில் தாக்கம் மற்றும் மின் பயன்பாடுகள், திறமையான மற்றும் விரைவான துகள்கள் கொள்முதல் ஆகியவற்றை வரையறுக்கப்பட்ட விலை கணக்கில் எடுத்துக்கொள்ளும். மத்திய மின்சார ஆணையத்தின் கீழ் உள்ள குழுவால் இறுதி செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட விலை நடைமுறை 2024 ஜனவரி 1 முதல் அமுலுக்கு வரும். இக்குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும் வரை, மின் நிறுவனங்கள் தங்கள் அனல் மின் நிலையங்களுக்கு உயிரி எரிபொருள் துகள்களின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக குறுகிய கால டெண்டர்களுக்குச் செல்ல வேண்டும்.

எரிசக்தி பாதுகாப்பு, புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் அதே நேரத்தில் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது ஆகியவற்றுக்கான அரசின் முக்கிய கொள்கையாக நிலக்கரி அடிப்படையிலான மின் நிலையங்களில் உயிரி எரிபொருள் இணைக்கப்படுவதாக மத்திய மின்துறை அமைச்சர் ஆர்.கே. சிங் கூறியுள்ளார்.

அனல் மின் நிலையங்களில் நிலக்கரியுடன் பயோமாஸ் எரி பொருளை இணைக்க வேண்டும் என்ற கொள்கையின்படி, இது வரை நாட்டில் உள்ள 47 அனல் மின் நிலையங்களில் மொத்தம் 64,350 மெகாவாட் திறன் கொண்ட சுமார் 1.80 லட்சம் மெட்ரிக் டன் பயோமாஸ் எரிபொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில், 2023-24 நிதியாண்டின் முதல் இரண்டு மாதங்களில் 50,000 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான இணை எரிபொருள் பயன்பாடும் அடங்கும்.

மேலும், சுமார் 114 மில்லியன் மெட்ரிக் டன் உயிரி எரிபொருள் துகள்கள் டெண்டர் விடும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. அனல் மின் நிலையங்கள் மூலம் சுமார் 69 லட்சம் மெட்ரிக் டன் பயோமாஸ் துகள்களுக்கு கொள்முதல் ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான கொள்கைகள் நடைமுறையில் இருப்பதாலும், சமர்த் இயக்கத்தின் மூலம் மத்திய மின்சக்தி அமைச்சகத்தின் உந்துதலாலும், நாடு முழுவதும் உள்ள அனல் மின் நிலையங்களில் உயிரி எரிபொருள் பயன்பாடு கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒரு கோடிக்கும் அதிகமான வருமான வரி கணக்கு தாக்கல்கள் செய்யப்பட்டு உள்ளது: வருமான வரித்துறை

புது தில்லி, ஜூன் 28

இதுவரை ஒரு கோடிக்கும் அதிகமான வருமான வரி கணக்கு தாக்கல்கள் செய்யப்பட்டு உள்ளதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.




இது குறித்து விரிவான செய்தியாவது: ஊதியதாரர்கள், 2022 -23 நிதியாண்டில், தாங்கள் ஈட்டிய வருமானத்திற்கான வரி கணக்கை தாக்கல் செய்ய கடைசி நாளாக ஜூலை 31 அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், ஜூன் 26 வரையிலான காலத்தில் கிட்டத்தட்ட ஒரு கோடிக்கும் அதிகமாக வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது குறித்து, வருமான வரித்துறை தெரிவித்துள்ளதாவது: கடந்த ஆண்டு ஜூலை 8ம் தேதி வரை, ஒரு கோடி எனும் அளவுக்கு வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு ஜூன் 26ம் தேதி வரையிலான காலத்திலேயே, ஒரு கோடிக்கும் அதிகமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்தாண்டு 12 நாட்கள் முன்னதாகவே, ஒரு கோடியை அடைந்து, புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரி செலுத்துவோர், கடைசி நேர சிரமங்களை தவிர்க்கும் வகையில், முன்கூட்டியே தங்கள் வருமான வரி கணக்கை தாக்கல் செய்யுமாறும் வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது.

# இந்தியாவில் செமிகண்டக்டர் சிப் தயாரிப்பதற்கான ஆலையை அமைக்க வேதாந்தா-பாக்ஸ்கான் விண்ணப்பம்



புது தில்லி, ஜூன் 28

வேதாந்தா, பாக்ஸ்கான் ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்து, இந்தியாவில் செமிகண்டக்டர் சிப் தயாரிப்பதற்கான ஆலையை அமைக்க மத்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு, வேதாந்தா, பாக்ஸ்கான் நிறுவனங்கள் இணைந்து, 28 நானோ மீட்டர் வகை செமிகண்டக்டர் சிப் தயாரிப்பு ஆலையை குஜராத்தில் அமைப்பதற்கு, அரசிற்கு கூட்டாக விண்ணப்பித்திருந்தன. தற்போது, 40 நானோ மீட்டர் வகையைச் சார்ந்த சிப் வகைகளை தயாரிப்பதற்கு, நிறுவனங் களை ஊக்குவித்து வருவதுடன், அதற்கான புதிய வழிகாட்டுதல் முறைகளையும் மத்திய அரசு வெளியிட்டது.இந்நிலையில், வேதாந்தா, பாக்ஸ்கான் கூட்டு நிறுவனம், தற்போது 40 நானோ மீட்டர் செமி கண்டக்டர் தயாரிப்பில் ஆர்வமுடன் இருப்பதாக தெரி வித்து, அரசிற்கு விண்ணப்பித்து உள்ளது. இதுகுறித்து, வேதாந்தா – பாக்ஸ்கான் செமிகண்டக்டர் ஆலைக்கான தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள டேவிட் ரீட் தெரிவித்துள்ளதாவது:

மத்திய அரசின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின் படி, நாங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளோம். இந்தியாவில் உலகத் தரம் வாய்ந்த செமிகண்டக்டர் ஆலையை உருவாக்க நாங்கள் உறுதிபூண்டு உள்ளோம். குஜராத்தில் ஆலைக்கான நிலத்தை இறுதி செய்ய உள்ளதுடன், உலகளாவிய திறமையாளர்களை பணியமர்த்தவும் திட்டமிட்டுள்ளோம். ஏற்கனவே சில தொழில் நுட்ப வல்லுனர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நடப்பாண்டில் மசாலா பொருட்கள் ஏற்றுமதி உயர்வு



புது தில்லி, ஜூன் 28

நடப்பு நிதியாண்டின் முதல் இரண்டு மாதங்களில், இந்திய மசாலா பொருட்கள் ஏற்றுமதி, இந்திய ரூபாயின் மதிப்பில் 41 சதம் வரை உயர்ந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. குறிப்பாக மிளகாய் ஏற்றுமதி 33 சதம் வரை அதிகரித்து உள்ளது. கடந்த ஏப்ரல், மே மாதங்களில், மசாலா பொருட்கள் ரூ.6,702 கோடி அளவிற்கு ஏற்றுமதியாகி உள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில், 4,746 கோடி ரூபாயாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டில் மிளகாய் மற்றும் சீரகத்தின் விலை அதிகரிப்பு மற்றும் இறக்குமதி செய்யும் சில நாடுகளின் தேவை குறைவு உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர்கொண்ட போதிலும், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த 2023ம் நிதியாண்டில், ரூ.31,761 கோடி மதிப்பிலான மசாலா பொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது. இந்திய ரூபாய் மதிப்பில் முந்தைய ஆண்டு ஏற்றுமதி மதிப்பான 30,320 கோடி ரூபாயுடன் ஒப்பிடுகையில் இது 4.74 சதவீதம் அதிகமாகும். அமெரிக்கா மற்றும் சீனா அதிகளவில் இந்திய மசாலா பொருட்களை வாங்கியுள்ளன.




### டாடா டெக்னாலஜிஸ், கந்தார் ஆயில், எஸ்பிஎப்சி பைனான்ஸ்

# புதிய பங்கு வெளியீட்டுக்கு செபி அனுமதி

புது தில்லி, ஜூன் 28

டாடா டெக்னாலஜிஸ், கந்தார் ஆயில், எஸ்.பி.எப்.சி., பைனான்ஸ்' ஆகிய நிறுவனங்கள், புதிய பங்கு வெளியீட்டுக்கு வருவதற்கான அனுமதியை பங்குச் சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான செபி வழங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.இது குறித்து விரிவான செய்தியாவது:

டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான டாடா டெக்னாலஜிஸ், ஒரு பொறியியல் சேவைநிறுவனமாகும். இந்நிறுவனம், உலகளாவிய அசல் உபகரண உற்பத்தியாளர்கள் மற்றும் அவர்களின் வினியோகஸ்தர்களுக்கு தயாரிப்பு மேம்பாடு உள்ளிட்ட பல தீர்வுகளை வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் பங்கு வெளியீட்டின் போது முழுக்க முழுக்க நிறுவனர்கள் மற்றும் பங்குதாரர்கள் பங்குகள் மட்டுமே விற்பனை செய்யப்பட உள்ளன.

மேலும், எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமான, கந்தார் ஆயில், புதிய பங்குகள் மற்றும் பங்குதாரர்களின் பங்குகளை விற்பனை செய்வதன் வாயிலாக நிதி திரட்ட திட்டமிட்டு உள்ளது. புதிய பங்குகள் விற்பனை வாயிலாக 357 கோடி ரூபாயும்; பங்குதாரர்கள் பங்குகள் விற்பனை வாயிலாக 500 கோடி ரூபாயும் திரட்ட உள்ளது. இந்நிறுவனத்துக்கு இத்துறையில், 30 ஆண்டு கால அனுபவம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், வங்கி சாரா நிதி நிறுவனமான எஸ்.பி.எப்.சி., பைனான்ஸ், புதிய பங்குகள் விற்பனையின் வாயிலாக 750 கோடி ரூபாயையும், பங்குதாரர்களின் பங்கு விற்பனை வாயிலாக 450 கோடி ரூபாயும் திரட்ட திட்டமிட்டுள்ளது.



## இந்திய சந்தையில் புதிய 4கே ஸ்மார்ட் டிவிக்களை

# சோனி நிறுவனம் அறிமுகம் செய்தது

சென்னை, ஜுன் 28

சோனி இந்தியா நிறுவனம் இந்திய சந்தையில் தனது புதிய பிரேவியா எக்ஸ்ஆர் எக்ஸ்90எல் சீரிஸ் மாடல்களை அறிமுகம் செய்து இருக்கிறது.

புதிய மாடல்களில் மேம்பட்ட காக்னிடிவ் பிராசஸர் எக்ஸ்ஆர் வழங்கப்பட்டு இருக்கின்றன. பிரேவியா எக்ஸ்ஆர் ஓஎல்இடி ஏ80எல் சீரிஸ் மாடல்களை தொடர்ந்து புதிய ஸ்மார்ட் டிவிக்கள் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளன.



புதிய ஸ்மார்ட் டிவி மாடல்கள் தலைசிறந்த காட்சி அனு பவத்தை வழங்குகிறது. இதில் உள்ள காக்னிடிவ் எக்ஸ்ஆர் பிராசஸர் காட்சி மட்டுமின்றி, சிறப்பான ஆடியோ அனுபவத்தையும் வழங்குகிறது. முற்றிலும் புதிய சோனி பிரேவியா மாடல் 55 இன்ச், 65 இன்ச் மற்றும் 75 இன்ச் அளவுகளில் கிடைக்கிறது. இந்த டிவி மாடல் தனித்துவம் மிக்க எல்இடி ஜோன்கள், சிறப்பான கான்டிராஸ்ட் வெளிப்படுத்துகிறது.

இத்துடன் எக்ஸ்ஆர் 4கே அப்ஸ்கேலிங் மற்றும் எக்ஸ்ஆர் சவுண்ட் பொசின், டிவி பார்க்கும் போது ஒட்டுமொத்த அனுபவத்தை மேம்படுத்துகிறது. இதில் உள்ள ஆம்பியனட் ஆப்டிமைசேசன் பிரைட்னசை அட்ஜஸ்ட் செய்து, ஆட்டோ எச்டிஆர் டோன் மேப்பிங் செய்து பிளே ஸ்டேசன் 5 கேமிங்கை ஆப்டிமைஸ் செய்கிறது. இந்த டிவியில் கேம் மெனு வழங்கப்பட்டு உள்ளது.

இந்த சோனி எக்ஸ்ஆர் 55எக்ஸ்90எல் மாடலின் விலை ரூ. 1 லட்சத்து 39 ஆயிரத்து 990 என்றும் சோனி எக்ஸ்ஆர்-65எக்ஸ்90எல் மாடலின் விலை ரூ. 1 லட்சத்து 79 ஆயிரத்து 990 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இரு மாடல்களின் விற்பனை ஏற்கனவே துவங்கி நடைபெற்று வருகிறது. சோனி எக்ஸ்ஆர்-75எக்ஸ்90எல் மாடலின் விலை மற்றும் விற்பனை விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று சோனி தெரிவித்துள்ளது.

# ஹெச்டிஎஃப்சி வங்கி-ஹெச்டிஎஃப்சி ஜுலை 1-ல் இணைப்பு




புது தில்லி, ஜுன் 28

நாட்டின் மிகப் பெரிய தனியார் வங்கியான ஹெச்டிஎஃப்சி வங்கியுடன் முக்கிய வீட்டுக் கடன் சேவை நிறுவனமான ஹெச்டிஎஃப்சியின் இணைப்பு வரும் ஜுலை 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள.

இது குறித்து ஹெச்டிஎஃப்சி நிறுவனத்தின் தலைவர் தீபக் பாரேக் தெரிவித்துள்ளதாவது: ஹெச்டிஎஃப்சி வங்கியுடனான ஹெச்டிஎஃப்சி நிறுவனத்தின் இணைப்பு ஜுலை 1 முதல் அமலுக்கு வருகிறது. அதற்கு முன்னதாக, ஹெச்டிஎஃப்சி வங்கி மற்றும் ஹெச்டிஎஃப்சி நிறுவனத்தின் இயக்குநர் குழு உறுப்பினர்கள் வரும் வெள்ளிக்கிழமை கூடி அதற்கான ஒப்புதலை வழங்குவார்கள் என்றார் அவர். பங்குச் சந்தைப் பட்டியலில் இருந்து ஹெச்டிஎஃப்சி நிறுவனத்தை நீக்கும் நடவடிக்கை ஜுலை 13-ஆம் தேதி நிறைவடையும் என்று அந்த நிறுவனத்தின் துணைத் தலைவரும், தலைமை செயல் அதிகாரிமான கேகி மிஸ்திரி தெரிவித்தார்.

மேலும், இந்தியாவின் மிகப் பெரிய நிறுவன இணைப்பாகக் கூறப்படும் ஹெச்டிஎஃப்சி வங்கி - ஹெச்டிஎஃப்சி நிறுவன இணைப்பு குறித்து கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அறிவிக்கப் பட்டது. இணைப் புக்குப் பிந்தைய நிறுவனத்தின் மதிப்பு சுமார் ரூ.18 லட்சம் கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஹெச்டிஎஃப்சி வங்கி - ஹெச்டிஎஃப்சி இணைப்புக்குப் பிறகு, வங்கியின் 100 சத பங்குகள் பொது பங்குதாரர்களிடம் இருக்கும். அத்துடன், ஹெச்டிஎஃப்சி நிறுவனத்தின் 41 சத பங்குகள், தற்போதைய ஹெச்டிஎஃப்சி வங்கியின் பங்குதரர்களிடம் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# ரெட்மி ஏ2 சீரிஸ் புதிய மெமரி வேரியன்ட் இந்திய சந்தையில் அறிமுகம்




புது தில்லி, ஜுன் 28

சியோமி நிறுவனம் கடந்த மாதம் ரெட்மி ஏ2 சீரிஸ் ஸ்மார்ட் போன்களை இந்திய சந்தையில் அறிமுகம் செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. புதிய ரெட்மி ஏ2 மற்றும் ஏ2 பிளஸ் ஸ்மார்ட்போன்களின் 2 ஜிபி ரேம், 64 ஜிபி மெமரி மாடல் தற்போது இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

இவற்றின் விலை முறையே ரூ.6,799 மற்றும் ரூ.8,499 என்று நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. ரெட்மி ஏ2 மற்றும் ஏ2 பிளஸ் மாடல்களில் 6.52 இன்ச் ஐபிஎஸ் எல்சிடி டிஸ்ப்ளே, எச்டி+ 1600x720 பிக்சல் ரெசல்யூஷன், 60ஹெர்ட்ஸ் ரிப்ரெஷ் ரேட் வழங்கப்பட்டு இருக்கிறது.

இரு மாடல்களிலும் மீடியாடெக் ஹீலியோ ஜி36 பிராசஸர், 4 ஜிபி ரேம், 64 ஜிபி மெமரி, மெமரியை கூடுதலாக நீட்டிக்கும் வசதி, பிரத்யேக மைக்ரோ எஸ்டி கார்டு ஸ்லாட் வழங்கப்பட்டு உள்ளது. கேமரா பொறுத்தவரை 8 எம்பி பிரைமரி கேமரா, கியூசிஜிஏ லென்ஸ், 5 எம்பி செல்ஃபி கேமரா உள்ளது. இரு மாடல்களிலும் 5000 எம்ஏஹெச் பேட்டரி வழங்கப்பட்டு உள்ளது. இத்துடன் 10 வாட் சார்ஜிங் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த ஸ்மார்ட்போன்களில் மைக்ரோ யுஎஸ்பி போர்ட், 3.5 எம்எம் ஹெட்போன் ஜாக், 3 ஜிபி வரை விர்ச்சுவல் ரேம் வசதி, ஆண்ட்ராய்டு 13 ஒஎஸ் வழங்கப்பட்டு இருக்கிறது. ரெட்மி ஏ2 சீரிஸ் மாடல்கள் சீ கிரீன், அக்வா புளூ மற்றும் கிளாசிக் பிளாக் வண்ணங்களில் கிடைக்கிறது.

# ரூ. 69.99 லட்சம் விலையில் புதிய டுகாட்டி பைக் அறிமுகம்

புது தில்லி, ஜூன் 28



டுகாட்டி இந்தியா நிறுவனம் தனது 2023 பனிகேல் வி4 ஆர் சூப்பர் பைக் மாடலை இந்திய சந்தையில் அறிமுகம் செய்திருப்பதாக செய்திகள் வெளியாகி யுள்ளது. புதிய 2023 டுகாட்டி பைக் விலை ரூ. 69 லட்சத்து 99 ஆயிரம், எக்ஸ்-ஷோரூம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இந்த மாடலில் 998சிசி, நான்கு சிலின்டர்கள் கொண்ட லிக்விட் கூல்டு என்ஜின் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த என்ஜின் 215 ஹெச்பி பவர், 111.3 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை வெளிப்படுத்தும் திறன் கொண்டிருக்கிறது.

இந்த பைக்கின் எடை 5 கிலோ வரை குறைந்துள்ளது. மேலும் 6 ஸ்பீடு கியர்பாக்ஸ் மற்றும் பை-டைரெக்சனல் குயிக்சிஃப்டர் வழங்கப்பட்டு இருக்கிறது. மேலும், சஸ்பென்ஷனிற்கு முன்புறம் 43எம்எம் ஆலின்ஸ் என்பிஎக்ஸ் 25/30 ஃபோர்க்குகள், பின்புறம் ஆலின்ஸ் டிடிஎக்ஸ் 36 மோனோ ஷாக் யூனிட் வழங்கப்பட்டு இருக்கிறது. பிரேக்கிங்கிற்கு டுவின் 330 எம்எம் முன்புற டிஸ்க், பிரெம்போ ஸ்டைல்மா எம்4.30 கேலிப்பர்கள், பின்புறம் 245எம்எம் சிங்கில் ரோட்டார், 2 பிஸ்டன் கேலிப்பர்கள் உள்ளன.

இந்த மாடலில் உள்ள காம்ப்ரிஹென்சிவ் எலெக்ட்ரானிக்ஸ் பேக்கேஜ் நான்கு ரைடிங் மோட்கள், கார்னெரிங் ஏபிஎஸ், டிராக்சன் கண்ட்ரோல், லான்ச் கண்ட்ரோல், வீலி கண்ட்ரோல், ஸ்லைடு கண்ட்ரோல், என்ஜின் பிரேக் கண்ட்ரோல் மற்றும் ஆட்டோ டயர் கலிபரேன் போன்ற வசதிகளை வழங்குகிறது.



# எல்ஜசியின் புதிய காப்பீட்டு திட்டம் அறிமுகம்

சென்னை, ஜூன் 28

நாட்டின் முன்னணி காப்பீட்டு நிறுவனமான இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம், தன விருத்தி என்ற புதிய காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.இது குறித்து எல்ஜசி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தன விருத்தி என்ற பெயரில் புதிய காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். இது, ஜூன் 23 முதல் செப். 30-ஆம் தேதி வரை மட்டுமே கிடைக்கக் கூடிய குறுகிய கால திட்டமாகும். காப்பீடு மற்றும் சேமிப்பின் கலவையான இந்தத் திட்டத்தின் கீழ், முதிர்வு காலத்தில் பாலிசிதாரருக்கு அடிப்படை காப்பீட்டுத் தொகையுடன் உத்தரவாத கூடுதல் தொகையும் வழங்கப்படும்.

ஒற்றை பிரீமியம் கொண்ட இது, பங்குச் சந்தை சாராத, தனி நபர் சேமிப்பு திட்டமாகும். முதிர்வு தேதிக்குள் பாலிசிதாரர் இறக்க நேரிட்டால் அப்போது காப்பீட்டுத் தொகையும், உத்தரவாதம் அளிக்கப்பட்ட கூடுதல் தொகை முதிர்வு காலத்திலும் வழங்கப்படும். ரூ.1.25 லட்சத்தில் தொடங்கி கூடுதலாக ரூ.5,000 மடங்குகளில் பிரீமியம் செலுத்தி இந்த பாலிசியைப் பெற்றுக் கொள்ளலாம். 10 அல்லது 15 அல்லது 18 ஆண்டுகளுக்கு பாலிசி காலத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நியாயமான விலைக்கு அரசு ஒப்புதல்

புது தில்லி, ஜுன் 28

2023-24-ம் ஆண்டு சர்க்கரைப் பருவத்திற்கான நியாயமான விலை நிர்ணயத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் 10.25 சதவீத பிழிதிறன் கொண்ட கரும்புக்கு குவிண்டாலுக்கு ரூ. 315 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு 0.1 சதவீத பிழி திறன் அதிகரிப்புக்கு குவிண்டாலுக்கு ரூ.3.07 உயர்த்தி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், கரும்பு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதைக் கருத்தில்கொண்டு, 9.5 சதவீத சர்க்கரை கட்டுமானத்திற்கும் கீழே உள்ள கரும்புக்கு எந்தவித விலைக் குறைப்பும் செய்யக் கூடாது என அரசு முடிவெடுத்துள்ளது. அத்தகைய விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு ரூ.291.97 வழங்கப்படும். நடப்பு 2022-23 சர்க்கரைப் பருவத்தில் குவிண்டாலுக்கு ரூ. 282.12 வழங்கப்படுகிறது. இந்தப் பருவத்திற்கான கரும்பு உற்பத்திச் செலவு குவிண்டாலுக்கு ரூ.157-ஆக உள்ளது. 2023-24 பருவத்தில், 2023 அக்டோபர் 1 முதல் விவசாயிகளிடமிருந்து கரும்பு கொள்முதல் செய்வதற்கு இந்த விலைப் பொருந்தும். இந்த சர்க்கரைத்துறை மிக முக்கியமான விவசாயம் சார்ந்த துறையாக உள்ளது. இது 5 கோடி கரும்பு விவசாயிகளுக்கும், அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் வாழ்வாதாரம் வழங்கி வருகிறது. மேலும் சர்க்கரை ஆலைகளில், பணிபுரியும் 5 லட்சம் தொழிலாளர்களும், கரும்பு அறுவடை மற்றும் போக்குவரத்தில் பங்கேற்கும் தொழிலாளர்களுக்கும் இதனால் பயன்கிட்டும்.




தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு முதற்கட்ட பங்களிப்பாக ரூ.1 கோடிக்கான காசோலையினை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் டால்மியா நிறுவன நிர்வாக இயக்குநர் புனித் டால்மியா சார்பில் ஹர்மீத் சிங் செட்டி தலைமை செயலகத்தில் வழங்கினார்.